**செய்தி வெளியீடு எண்:711** **நாள்: 25.10.2017**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள், சட்ட மன்றத்தில், 19.07.2017 அன்று துறையின் மீதான மானியக்கோரிக்கையின்போது மாறிவரும் சூழலுக்கேற்ப புதிய தொழில்நுட்பங்களையும் அவ்வப்போது வெளியிடக்கூடிய பணி விதித் திருத்தங்களையும், அறிவுறுத்தங்களையும் அறிந்துகொண்டு, அதனடிப்படையில் கோப்புகளை திறம்பட கையாளும் வகையில் தலைமைச் செயலக அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு கீழ்கண்ட 10 பொருண்மைகளில் 600 அலுவலர்களுக்கு குறுகிய கால பயிற்சியாக 26 அணிகளில் ஆண்டொன்றிற்கு ரூ. 25.08 இலட்சம் செலவில் நடப்பு நிதியாண்டிலிருந்து அண்ணா மேலாண்மை நிலையத்தில் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

1) Environment Laws & Regulations
2) Smart City Scheme
3) Urban Planning and Management
4) Procurement Procedures and Tender Transparency Act
5) Goods and Services Tax
6) Budget Financial Management
7) Personnel Management and Establishment Matters
8) MS Excel Advance Application
9) ICT Application
10) e-Governance Security Issues

இதனடிப்படையில் 10 பொருண்மைகளில் முதலாவதாக 25.10.2017 முதல் 27.10.2017 வரை “சரக்கு மற்றும் சேவை வரி” என்ற தலைப்பில் 30 தலைமைச் செயலக அலுவலர்களுக்கு மூன்று நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியை மாண்புமிகு டி. ஜெயக்குமார். B.Sc. BL., மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் 25.10.2017 அன்று காலை 10.00 மணியளவில் துவங்கிவைத்தார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**